பக்கங்கள் 14

# மாலை முரசு

'முரசு' டிஜிட்டல் நாளிதழின் இணையத்தளமான www.murasu.lk இன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 04 ஞாயிற்றுக்கிழமை 22.10.2023 அதிர்வு 83

# தமிழருக்கு உரிய நீதி கிடைக்கும் வரை ஓயாது போராடிக்கொண்டே இருப்போம்

## களுவாஞ்சிக்குடிப் படுகொலை நினைவேந்தலில் சாணக்கியன் தெரிவிப்பு



- பாறுக் ஷிஹான் -

தமிழ் மக்களுக்கு உரிய நீதி கிடைக்கும் வரை நாங்கள் ஓயாது போராடிக்கொண்டே இருப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம், களுவாஞ்சிக் குடிப் பகுதியில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 11 பேரின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப் பட்டது.

நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக் கியனின் பிரத்தியேக செயலாளர் விமல நாதன் மதிமேனன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

04▶

# செந்திலும் சாணக்கியனும் இணைந்து கிழக்கில் சூழ்ச்சி



## இப்படிக் குற்றஞ்சாட்டுகின்றார் அம்பிட்டிய தேரர்


## மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு

"கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் இணைந்து கிழக்கில் சூழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கின்றனர்." - என்று அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குச் சார்பாகச் செயற்படுகின்றார் என்றும் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் சிங்கள மக்களை அச்சுறுத்தும் வகையில் சாணக்கியன் அறிவிப்புகளை விடுத்து வருகின்றார் என்றும் தேரர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

அத்துடன், இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் தேரர் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.



## வெளிநாட்டு மோகத்தால்

# போலி முகவர்களை நம்பி ஏமாந்த மட்டக்களப்பு மக்கள்



(பாறுக் ஷிஹான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளைச் சேர்ந்த 188 பேர் வெளிநாட்டு மோகத்தால் பணத்தை இழந்துள்ளனர் என்று தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனிடம் முறைப்பாடு அளித் துள்ளனர்.

04▶

# ஆர்ப்பாட்டம் மீது கண்ணீர்ப் புகை

ஆசிரியர் – அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிஸார் நீர்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரயோகித்தனர்.

04▶

# மனைவியைக் கொன்ற கணவன் உயிர்மாய்ப்பு

குடும்பத் தகராறு காரணமாகக் கணவன் தனது மனைவியைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்ததோடு தானும் தற்கொலை செய்து கொண்டார் என்று பூகொட பொலிஸார் தெரிவித்தனர்.

04▶

# ‘முரசு’ டிஜிட்டல் நாளிதழ் அலுவலகத்தில் வாணி விழா



# ‘முரசு’ இணையத்தளம் அங்குரார்ப்பணம்



‘முரசு’ டிஜிட்டல் நாளிதழின் இணையத்தளமான www.murasu.lk இன்று பிரதம ஆசிரியர் என்.வித்தியாதரனால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் ‘முரசு’ குழுமத்தின் நிர்வாகி எஸ்.தனராஜ் மற்றும் ஆசிரியர் பீடத்தினர் கலந்துகொண்டனர்.



# சிறீதரன் எம்.பியின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் வித்திக்கு குடிதண்ணீர்!

அடிப்படை உட்கட்டுமான வசதிகள் அற்ற நிலையில் இயங்கிவரும் கிளிநொச்சி மலையாளபுரம் திருவள்ளுவர் ஆரம்பப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட குடி தண்ணீர் கிணறும் அதனுடன் இணைந்த குடி தண்ணீர் வழங்கல் கட்டமைப்பும் நேற்று (23) நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் மாணவர்களின் பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.



இந்தப் பாடசாலையில் நீண்ட காலமாக நிலவிவந்த குடி தண்ணீர்த் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் கோரிக்கைக்கு அமைவாக, நியூசிலாந்தில் வசிக்கும் அரியதாஸ் செல்வதாஸ் எனும் நன்கொடையாளரின் நிதிப்பங்களிப்பில், அவரது தாயாரான அமரர் மேரிரெஜினா அரியதாஸ் ஞாபகார்த்தமாக இந்தக் கிணறு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த் நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம், பாடசாலை அதிபரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, ஒலி பெருக்கி வசதியையும், சுற்று வேலி அமைக்கும் பணிகளையும் காலக்கிரமத்தில் மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 21 இந்துக் கோயில்களை உடைத்து கொள்ளையிட்ட சந்தேக நபர் கைது!

நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் 21 கோயில்களை உடைத்து பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டார் எனக் கூறப்படும் நபரொருவரை நுவரெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் அந்த நபருக்கு, நகைகளை விற்பனை செய்ய உதவிய இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பேவெல - பொரகஸ் முகவரியைச் சேர்ந்த 43வயதுடைய நபரொருவரே பிரதான சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நுவரெலியா பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆர்.எஸ்.ராஜசிங்க,



விசாரணையின்போது பிரதான சந்தேக நபர் வாக்கு மூலம் அளித்துள்ளார். அதில் குறிப்பாகக் கோயிலை உடைத்துத் திருடுவதற்கு முன் கடவுளை வணங்கி, தான் கடவுளிடம் மன்னிப்பு கேட்டுள்ளார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மது அருந்தியதன் காரணத்தாலேயே கோவில்களை உடைக்கும் எண்ணம் வந்ததாக அவர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

ஓராண்டுக்குள் 21 கோயில்களை உடைத்து அதில் கிடைத்த பணத்தை வாழ்க்கைக்கு பயன்படுத்தியதாகவும், திருடப்பட்ட தங்க நகைகளை நுவரெலியா ஹட்டன் மற்றும் தலவாக்கலை பகுதிகளிலுள்ள தங்க நகைகள் பதப்படுத்தும் நிலையங்களுக்கு விற்பனை செய்ததாகவும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தலவாக்கலை, ராகலை, ஹைபோரஸ்ட், லிந்துல, ஹட்டன், பொகவந்தலாவ, நானுஓயா, உடபுஸ்ஸல்லாவ, வெலிமடை, கெப்பெட்டிபொல, மாத்தளை, கம்பளை, நாவலப்பிட்டி ஆகிய பொலிஸ் எல்லைக்குட்பட்ட இருபத்தொரு இந்துக் கோயில்களை உடைத்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தமிழருக்கு உரிய நீதி...

நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனும், உயிரிழந்தவர்களின் உறவினர்களும் மெழுகுதிரிகளை ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தினர்.

அதன் பின்னர் உரையாற்றிய நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்,

"களுவாஞ்சிக்குடியில் வைத்து 1987 ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி எனது பெரியப்பா சக்கரவர்த்தி இராச மாணிக்கம் உட்படப் பலர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இதில் கொல்லப் பட்டவர்கள் அப்பாவி மக்கள். இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த கொல்லப்பட்ட மக்களுக்கான நினைவுத் தூபியை சி.மு.இராசமாணிக்கம் அமைப்பினர் 30ஆம் ஆண்டு நினைவேந்தலில் (2017) இவ்விடத்தில் அமைத்திருந்தனர்.

இன்று உயிரிழந்தவர்களது 36ஆம் ஆண்டு நினைவு தினமாகும். மறைந்த இராசமாணிக்கம் சக்கரவர்த்தியின் குடும்ப உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் ஏனையவர்களது பங்குபற்றலுடன் அஞ்சலி நிகழ்வை இன்று நடத்தினோம். ஆனால், இது போன்று வடக்கு – கிழக்கில் கடந்த காலங்களில் இலட்சக்கணக்கில் பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கொல்லப்பட்ட மக்களுக்கு இன்று வரை நீதி எதுவும் கிடைக்காத சூழ்நிலையில் தொடர்ந்தும் நீதியைக் கேட்டு மக்கள் போராடிக் கொண்டிருக்கின் றார்கள். தமிழ் மக்களுக்கு உரிய நீதி கிடைக்கும்வரை நாங்கள் ஓயாது போரா டிக்கொண்டே இருப்போம் என்பதை இவ் விடத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்." – என்றார்

## மனைவியைக் கொன்ற...

பூகொட மண்டாவல பிரதேசத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மனைவியைக் கொலை செய்த சந்தேகநபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளின் போது சந்தேகநபரின் சடலம் வீட்டுக்கு அருகில் உள்ள மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப் பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் மண்டாவல பகுதியைச் சேர்ந்த 46 மற்றும் 54 வயது டைய மனைவி, கணவன் எனப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

## ஆர்ப்பாட்டம் மீது...

இன்று இசுருபாயவில் உள்ள கல்வி அமைச்சுக்கு முன்பாக இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு பேரணியாகச் சென்றபோதே பொலிஸார் நீர் மற்றும் கண் ணீர்ப்புகைப் பிரயோகத்தை மேற் கொண்டனர்.

இதன் காரமாக பொரளை – கொட்டாவ பிரதான வீதியின் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது.



## போலி முகவர்களை...

சுமார் 8 கோடி ரூபாவைப் போலி முகவர்களின் ஆசைகளை நம்பித் தாம் இழந்துள்ளனர் என்று தெரிவித்த அவர் கள், தற்போது நிர்க்கதிக்குள்ளான தம்மைக் காப்பாற்றுமாறு நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரினர்.

நேற்று மாலை களுவாஞ்சிக்குடிப் பகுதியில் அமைந்துள்ள சாணக்கியன் எம்.பியின் அலுவலகத்துக்கு வந்த பாதிக் கப்பட்ட மக்கள், பல மணித்தியாலங்கள் எம்.பியுடன் உரையாடி தத்தமது பிரச் சினைகளை முன்வைத்தனர்.

இது தொடர்பில் சாணக்கியன் எம். பி. தெரிவிக்கையில்,

"வெளிநாட்டில் வேலைவாய்ப்பு எனக் கூறி 188 பேரிடம் 8 கோடி ரூபாவுக்கு அதிகமான பணம், அரச உத்தியோகத்தில் உள்ள சிலரால் மோசடி செய்யப்பட் டுள்ளது.





இதற்கு உடந்தையாக பாடசாலை மாணவன் ஒருவரும் உள்ளடங்குகின்றார் என்று அறிகின்றேன்.

இவ்விடயம் தொடர்பில் தற்போது 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸாரால் சட்ட நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது என்றும் அறிகின் றேன்.

இவ்விடயம் தொடர்பில் உரிய அதி காரிகளைத் தொடர்பு கொண்டும் கலந்துரையாடினேன். பாதிக்கப்பட்ட மக்கள் என்னை இதற்கான உரிய நீதியைப் பெற்றுத் தரும்படி எனது அலுவலகத்தில் சந்தித்தார்கள்.

தற்போது இவ்வாறான மோசடிகள் அதிகளவாக இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான ஏமாற்றுக்காரர்களிடமிருந்து மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்." – என்றார்.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் 188 பேரைத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். இதில் 146 பேரை டுபாய் நாட்டுக்கும், 20 பேரை டென்மார்க் நாட்டுக்கும், 22 பேரைத் தாய்லாந்து நாட்டுக்கும் அனுப்புவதாகக் கூறி பாரிய பண மோசடியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

டுபாய் நாட்டுக்குச் செல்பவர்களிடம் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், டென்மார் நாட்டுக்குச் செல்பவர்களிடம் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், தாய்லாந்து நாட்டுக்குச் செல்பவர்களிடம் 4 முதல் 5 இலட்சம் வரை ரூபா வரையும் அவர்கள் பணம் வாங்கியுள்ளனர்.

மொத்தமாக 188 பேரிடம் அண்ணள வாக 8 கோடி ரூபாவை அவர்கள் மோசடி செய்துள்ளனர்.






# களுவாஞ்சிக்குடி படுகொலை நினைவேந்தல்

மட்டக்களப்பு மாவட்டம், களுவாஞ்சிக்குடிப் பகுதியில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 11 பேரின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**(படங்கள்:- பாறுக் ஷிஹான்)**

























# நல்லூரில் வாழைவெட்டு...

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விஜயதசமி மானம்பூ உற்சவம் இன்று காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

காலை 6.45 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று குதிரை வாகனத்தில் முருகப்பெருமான் எழுந்தருளி வெளிவீதி உலாவந்ததுடன் மானம்பூ உற்சவம் இடம்பெற்றது.













(படங்கள்: பிரபாகரன் டிலக்ஸன், எஸ்.நிதர்ஷன்)





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பலாலியைத் தரம் உயர்த்துங்கள்!

தமிழர் தேசியப் பிரச்சினைகளைத் தென்னிலங்கை அரசு கையாளும் விதமே அலாதியானதுதான்.

இங்கு எதைச் செய்ய வேண்டுமோ அதை அரசு செய்யாது. அவசர - அவசிய விடயத்துக்கு அது முக்கியத்துவம் கொடுக்காது. எது அவசரமற்றதோ, அதற்கு முதலில் முக்கியத்துவம் கொடுக்கும்.

பலாலி விமான நிலைய அபிவிருத்தி தொடர்பாக துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா இப்போது வெளியிட்டிருக்கும் தகவலும் அத்தகையதுதான்.

பலாலி மீண்டும் சர்வதேச விமான நிலையமாக மாற்றப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துள்ள போதிலும் அங்கு உட்கட்டமைப்பு வசதிகள், அடிப்படை வசதிகள் பெரிய அளவில் ஏற்படுத்தப்படவில்லை என்பது உண்மைதான்.

விமானப் பயணிகள் மற்றும் விமான நிலையத்திற்கு வருபவர்களுக்கு சௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுப்பது முக்கியமானதுதான்.

ஆனால், இந்த விமான நிலையம் இப்பிரதேசத்திற்கான தொடர்பாடல் - போக்குவரத்து மையமாக விருத்தியடைவதற்கு மிக முக்கியமான அம்சம் ஒன்று உள்ளது.

உலகம் முழுவதும் வலிமையான புகலிடத் தமிழர்கள் வசிக்கின்றார்கள். தமது பிரதேசத்தில் உள்ள சர்வதேச விமான நிலையம் ஊடாக அவர்கள் நாட்டுக்கு வந்து செல்லக்கூடிய மையமாக பலாலி மாறினால்தான் அதன் தரம் உயரும். சேவை விருத்தியடையும். இந்தப் பிராந்தியமும் மேம்படும்.

ஆக, அறுபது பயணிகள் மட்டும் பயணம் செய்யக்கூடிய சிறிய பயணிகள் விமானங்களே பலாலியில் வந்து இறங்கிப் போகக்கூடிய நிலைமையே கடந்த நான்கு வருடங்களாக நீடிக்கின்றது. அதில் பயணி ஒருவர் தம்முடன் ஆக இருபது கிலோ எடையுள்ள பொருள்களை மட்டுமே எடுத்துவர அனுமதிக்கப்படுகின்றார்கள்.

புகலிடத் தேசங்களில் இருந்து தாயகம் திரும்புவோர் இத்தகைய சிறிய ரக விமானங்கள் மூலம் தத்தமது பொருள்களுடன் வந்து போக முடியாத நிலையில் இந்த விமான நிலையம் ஊடான பாதையைப் பயன்படுத்துவதில்லை. பயன்படுத்த முடிவதில்லை. அதனால் தொடர்ந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை அவர்கள் நாட வேண்டிய நிலைமை நீடிக்கின்றது. அந்த விமான நிலையம் செழிக்கின்றது. பலாலி மேம்படாமல் தடுமாறுகின்றது.

பெயர்தான் சர்வதேச விமான நிலையம். பல்வேறு நாடுகளிலும் உள்ள புலம்பெயர் தமிழர்கள் பயன்படுத்தக்கூடிய வசதியான விமான நிலையமாக அது உயரவே இல்லை. உயர்த்தப்படவும் இல்லை. சர்வதேச விமான நிலையம் என்றால் அதற்கு அடிப்படைக் கட்டுமான வசதிகள் செய்யப்படத்தான் வேண்டும். அதே சமயம் வெறுமனே இந்தியாவில் இருந்து சிறிய ரக விமானங்கள் மட்டுமல்லாமல், சர்வதேச போக்குவரத்துக்கான தொடர்பு விமானங்கள் வந்து செல்வதாக அதை மாற்றுவதுதான் முக்கியம். ஓடு பாதையை விஸ்தரித்து, அதன் தரத்தை மேம்படுத்தி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுதான் உடன் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

## எல்லை தாண்டி மீன் பிடித்த 8 மீனவர்கள் கைதாகினர்

எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டு 8 இலங்கை மீனவர்களை இந்திய கடலோர பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களது நான்கு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைதானவர்கள் படகுகளுடன் மண்டபம் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு மண்டபம் மரைன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

எட்டு மீனவர்களும் காற்றின் வேகம் காரணமாக திசை மாறி இந்திய கடற்பரப்புக்குள் மீன் பிடிக்க வந்தனர் என்று விசாரணைகளில் தெரிவித்துள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை இந்திய கடலோர பொலிஸ் மற்றும் சுங்கத்துறை அதிகாரிகள் இணைந்து சர்வதேச கடல் எல்லையில் மேற்கொண்ட நடவடிக்கையில் இலங்கைக்கு கடல் அட்டை மற்றும் சமையல் மஞ்சள் கடத்திய மண்டபத்தைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## முகவர் ஊடாக வெளிநாடு சென்றவர் லெபனான் சிறையில்

### மீட்டுத் தாருங்கள் என்று அவரது மனைவி கோரிக்கை



(எஸ். நிதர்சன்)

பிரான்ஸ்'க்குச் செல்வதற்காக முகவர் ஒருவரை நம்பி சென்ற யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த ஒருவர் லெபனான் நாட்டின் சிறையில் உள்ளார் என்றும் அவரை மீட்டு நாட்டுக்கு கொண்டுவர உதவுமாறும் குடும்பத்தினரால் உருக்கமான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை வசந்தபுரம் பகுதியைச் சேர்ந்த புவனேஸ்வரன் சயந்தன் என்ற இளம் குடும்பஸ்தரே முகவரை நம்பி ஏமாந்துபோய் லெபனான் நாட்டின் சிறையில் சிக்கியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவரது மனைவி,

பிரான்ஸ் நாட்டுக்குச் செல்வதற்கு முகவர் ஒருவரை நம்பி விமானம் மூலம் வெவ்வேறு நாடுகளுக்கு சென்று லெபனான் ஊடாக பிரான்ஸ் செல்வதற்காக இருந்த போது உரிய ஆவணங்கள் இல்லை என்பதற்காக கைது செய்யப்பட்டு லெபனான் சிறையில் வைக்கப்பட்டுள்ளார். வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சால் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

குடும்ப வறுமை காரணமாக பிரான்ஸ் செல்வதற்காக எனது கணவர் கடந்த ஜுன் மாதம் இலங்கையில் இருந்து புறப்பட்டார். ஐந்து மாதங்கள் கடந்துள்ள நிலையில் லெபனான் நாட்டின் சிறையில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

லெபனான் அருகில் உள்ள இஸ்ரேல் நாட்டில் யுத்தம் இடம்பெறுவதால் எமக்குப் பயமாக உள்ளது. எனவே எனது கணவரை மீட்க உதவுங்கள்.-என்று தெரிவித்துள்ளார்.



# சண்டிலிப்பாய் கோட்ட ஆசிரியர் தின நிகழ்வுகள்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண முன்பள்ளிகளின் சண்டிலிப்பாய் கோட்ட கிளைச் சங்கத்தின் ஆசிரியர் தின நிகழ்வு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தச் சங்கத்தின் இணைப்பாளர் திருமதி யோகேந்திரன் கேமநளனி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ம.கணேசன் மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது முன்பள்ளி மாணவர்களின் பாண்ட் வாத்தியங்களுடன் விருந்தினர்களுக்கு மாலை அணிவித்து அழைத்து வரப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி முன்பள்ளி மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

இந்த நிகழ்வில் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.









# கால்வாய்க்குள் வீழ்ந்த யானை; மீட்கும் பணிகள் துரித கதியில்!

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று இசங்காணிச்சீமை வயல் பிரதேசத்தில் உள்ள கால்வாய்க்குள் கடந்த இரண்டு தினங்களாகக் காட்டு யானை ஒன்று வீழ்ந்து உயிருக்கு போராடி வந்துள்ளது என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை வேளையில் இக்காட்டு யானை கால்வாய்க்குள் வீழ்ந்தாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

காலில் காயம் ஏற்பட்டு நடக்க முடியாத நிலையில் சில தினங்களாக இப்பிரதேசத்தில் இக்காட்டு யானைகள் நடமாடி வந்ததாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்துக்கு வருதை தந்த அக்கரைப்பற்று பொலிஸார் அம்பாறை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்ததை அடுத்து அந்த இடத்துக்கு விரைந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் யானைக்கு சிகிச்சையளித்தனர்.



அத்தோடு பெங்கோ இயந்திரத்தின் உதவியுடன் கால்வாய்க்குள் வீழ்ந்த யானையை மீட்பதற்காகப் பல மணி நேரம் முயற்சித்தும் யானையை மீடக முடியவில்லை.

நீர் அருந்துவதற்காக வருகை தந்த வேளையில் இது கால்வாய்க்குள் வீழ்ந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

யானை வீழ்ந்த போது குறைந்தளவிலான நீரே காணப்பட்டது. இருந்த போதிலும் தற்போது இக்கால்வாயில் அதிக நீர் ஓடிக் கொண்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. யானையை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# காங்கேசன்துறை மாங்கொல்லை ஞான வைரவர் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை மேற்கு, மாங்கொல்லை ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை மாலை 3 மணியளவில் கணபதி ஹோமத்துடன் பூஜை வழிபாடுகள் இடம்பெறும்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் பூஜைகள் ஆரம்பமாகி காலை 7.30 மணி தொடக்கம் 9.30 மணிவரையிலான சுப வேளையில் கும்பாபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து அபிஷேக பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.



இந்த ஆலயமானது கடந்த 33 வருட காலமாக இராணுவ உயர் பாதுகாப்பு வலய பகுதிக்குள் இருந்தது.

கடந்த ஜூன் மாத காலப் பகுதியில் ஆலய சூழலையும் , அதனை அண்டிய சில பிரதேசங்களில் இருந்தும் இராணுவத்தினர் வெளியேறி சென்ற நிலையில் ஆலய கும்பாபிசேஷகம் இடம்பெறவுள்ளது.



# யாழ். ஊடக அமையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ். ஊடக அமையத்தின் 2023-2024 ஆண்டுக்கான புதிய நிர்வாகம் நேற்று முன்தினம் தெரிவு செய்யப்பட்டது.

யாழ். ஊடக அமைய பொதுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றபோதே புதிய ஆண்டுக்கான நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் உரை, செயலாளர் உரை, பொருளாளர் கணக்கறிக்கை வாசித்தல் என்பன இடம்பெற்று புதிய நிர்வாக தெரிவு ஊடக அமைய உறுப்பினர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இதன்போது யாழ் ஊடக அமையத்தின் புதிய தலைவராக மூத்த பத்திரிகையாளர் குமாரசாமி செல்வகுமார் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக சி.நிதர்சனும் பொருளாளராக க.கம்சனனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதனை தொடர்ந்து, உப தலைவர் , உப செயலாளர் தெரிவை அடுத்து நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ். ஊடக அமையமானது, 10 ஆண்டுகளைக் கடந்து 11ஆவது ஆண்டில் கால் பதித்துள்ளது.

# விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

(நூருல் ஹுதா உமர் )

மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் மருதமுனை இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கு உதவுவோம் எனும் செயற்றிட்டத்தின் கீழ் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மனாரியன் 88 அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல். முக்தாரால் முன்னெடுக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மருதமுனை வேரிஸ் விளையாட்டு கழகம் மற்றும் பர்வின் ரெடிங் மற்றும் லதான் அக்ரோ இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்-ஹாஜ் கலீல் முஸ்தபாவுடன் கலந்துரையாடல் மருதமுனை ஆத்தியடி தோப்பில் இன்று இடம் பெற்றது.

விளையாட்டு கழக வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மருதமுனை இளைஞர் கழகங்களுக்கு உதவுவோம் என்னும் செயற்றிட்டத்துக்காக அல் ஹாஜ் கலீல் முஸ்தபா கௌரவிக் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.





# பலாலி மயிலிட்டி வடக்கு பகுதியில் 120 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது!


பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலிட்டி வடக்கு பகுதியில் 120 லீற்றர் கசிப்புடனும் 800 லீற்றர் கோடாவுடனும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மயிலிட்டி வடக்கு பகுதியை சேர்ந்த 37 வயதானவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இதன்போது கசிப்பு தயாரிக்க பயன்படுத்தும் பொருள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாகக் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபடும் அந்த நபரை விசாரணைகளுக்கு பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




# சவேந்திர சில்வாவைப் பிரிட்டனில் தடை செய்யத் தொடர் நடவடிக்கை!

## ஜோன் பென்றோஸ் மற்றும் ஜாக் ப்ரெட்டன் எம்.பிகளுடன் சந்திப்பு

இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்தக் குற்றவாளிகளைப் பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடை விதிப்பு அதிகார சபையின் கீழ் தடைசெய்வதற்குப் பிரிட்டன் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, மேலும் இரு முக்கிய சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன.

பிரித்தானியாவின் வெஸ்டன் சூப்பர் மேரி (Weston Super Mare) பகுதி நாடாளுமன்ற உறுப்பினரான ஜோன் பென்றோஸுடன் இடம்பெற்றது. அடுத்த சந்திப்பும், இந்த மாதம் ஸ்டோக் ஆன் ட்ரெண்ட் (Stoke on Trent) பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஜாக் ப்ரெட்டனுடன் இடம்பெற்றுள்ளது.

சட்ட ஆலோசகரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான கீத் குலசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்த முக்கிய சந்திப்பில், பழமை வாதக் கட்சியான தமிழர்கள் அமைப்பின் (British Tamil Conservatives – BTC) துணைத் தலைவரும், ஆணையாளருமான ஜெய் கணேஸ் , மற்றும் இனப்படுகொலையைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமாக சர்வதேச மையத்தின் சார்பில் றோய் ஐக்ஷான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் இனப்படுகொலையின் நேரடிச் சாட்சியங்கள் மற்றும் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களான கோகுலன் குணசீலன், ஜனார்த்தனன் இராஜேஷ்வரன், மோகனதர்சன் நாகநாதன் மற்றும் ஸ்ரீரிபன் நாகநாதன் கலந்து கொண்டு தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

கீத் குலசேகரம் தனது தலைமை உரையின் போது, இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலைக்கு வரலாற்று ரீதியாக பிரிட்டனே பொறுப்பு என்பதை விளக்கி, தமிழ் மக்களுக்கு நீதி வழங்க வேண்டிய கடமைப்பாட்டையும் எடுத்துரைத்தார்.

ITJP மற்றும் ICPPG ஆகிய அமைப்புகள் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்குப் போதுமான ஆதாரங்களை சமர்பித்த போதும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்க தவறியிருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் மட்டுமன்றி, தற்போது இலங்கையில் தொடரும் ஆள்கடத்தல் மற்றும் சித்திரவதைகளும் சவேந்திர சில்வாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயுத படைகளே மேற்கொண்டு வருவதால் அதற்கும் சவேந்திர சில்வாவே பொறுப்பு என்றும், சந்திப்பில் கலந்துகொண்டசித்திரவதைக்குள்ளானவர்கள் இதற்கு நேரடிச் சாட்சி என்றும் தெரிவித்தார்.

சவேந்திர சில்வா யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டிருப்பது ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்மீது ஏற்கனவே அமெரிக்கா, கனடா பயணத்தடை விதித்துள்ளது பொன்ற விடயங்களும் எடுத்துக் காட்டப்பட்டன.

அமெரிக்கா, கனடாவின் வழியை பின்பற்றி பிரிட்டனும் தடை விதிக்க வேண்டும் என்று கோரிப் பிரிட்டன் புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதையும் விவரித்தார்.

கருத்துக்களை உள்வாங்கிய இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவடைந்தனர்.

ஈழத் தமிழர்களின் கோரிக்கையையும் ஆதங்கத்தையும், தமது பகுதியில் வாழும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் பிரிட்டன் அரசுக்கு எடுத்துரைப்பதாகவும், FCDO இதுவரை நடவடிக்கை எடுக்காமைக்கு காரணத்தை கேட்டு கடிதம் அனுப்புவதாகவும் வாக்களித்தனர்.

அத்துடன் கீத் குலசேகரம் கேட்டுக் கொண்டபடி தமிழருக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழு மற்றும் மக்னெட்ஸ்கை தடைகளுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற குழுக்களில் இணையவும், குளூனுழுவுக்குத் தமிழ் மக்கள் சார்பில் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவைத் தடைசெய்யக் கோரி தம்மாலான வகையில் அழுத்தம் கொடுப்பதாகவும் இதன்போது தெரிவித்தனர்.

# மாகாண மட்டத்துக்குத் தெரிவு!

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி – அல் அக்ஷா தேசியப் பாடசாலை மாணவர்கள் இருவர் தமிழ் வாசிப்பு மற்றும் சிங்களம் பேச்சுப் போட்டிகளில் மாகாண மட்டத்தில் முதலிடங்களைப் பெற்று, தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.





அகில இலங்கை தமிழ் தின மற்றும் சிங்களப் போட்டி நிகழ்ச்சிகள் குருநாகல், வாரியாபொல கல்வி அபிவிருத்தி மத்திய நிலையத்தில் இடம் பெற்ற போட்டி நிகழ்ச்சியின் போதே இந்த மாணவர்கள் இருவரும் முதலிடங்க ளைப் பெற்றுக்கொண்டனர்.

இதன்படி, இரண்டாம் மொழி சிங்களப் பேச்சுப் போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் ஆறாம் தரத்தில் கல்வி பயிலும் மாணவி எம்.நஸீம் ஆயிஷா மனால் மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று, தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

தமிழை தாய் மொழியாக கொண்ட மாணவி சிங்கள பேச்சுப் போட்டியில் இவ்வாறானதொரு சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

இதேவேளை, மாகாண மட்டத்தில் இடம்பெற்ற தமிழ் வாசிப்பு போட்டி பிரிவு 2 இல், ஐ.எம். இனான் எனும் 7 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவனும், மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுத் தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



# இரு தசாப்தங்களின் பின் ஆசிரியர்கள் கௌரவிப்பு

(ஹஸ்பர்)

திஹாறிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் 2003 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்கள் பாடசாலையில் விட்டு வெளியேறி 20 வருடங்கள் ஆகின்றன. இதனை முன்னிட்டு தரம் ஒன்று தொடக்கம் 13 வரை கல்வி கற்ற ஆசிரியர்களை நன்றியுடன் ஞாபகப்படுத்தும் நிகழ்வு ஒன்றை நடத்தினர். திஹாறிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் மாணவர்களும் ஆசிரியர்களும் ஒன்று கூடல் நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

திஹாறிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றித் தற்போது வேறு பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களும் இதே கல்லூரியில் தற்போதும் கூட கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களும் தற்போது ஓய்வு நிலையில் இருக்கக் கூடிய ஆசிரியர்களும் இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# மக்கள் பயன்பாட்டுக்கு விடாமலேயே அழிவடையும் பார்வையாளர் அரங்கு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது கடற்கரை வீதியில் அமைந்துள்ள பௌஸி விளையாட்டு மைதானத்தில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் விளையாட்டுத்துறை பிரதியமைச்சராக இருந்த போது நிர்மாணிக்கப்பட்ட பார்வையாளர் அரங்கு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்படாத நிலையில் அழிவடைந்து வருகின்றது.

அதன் தகரத்தினாலான கூரைகள் துருப்பிடித்து அழிந்து வருகின்றன என்று இந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நிர்மாணிக்கப்பட்ட நாள் முதல் இதுவரை பயன்படுத்தப்படாமலுள்ள இந்தப் பார்வையாளர் அரங்கைச் சூழ குப்பை கூழங்கள் நிறைந்துள்ளமை சுற்றாடலுக்குப் பெரும் சவாலாக உள்ளது.

கடற்கரையோரத்தில் இரும்பு மற்றும் தகரத்திலான பொருள்கள் துருப்பிடிக்கும் என்று தெரிந்தும் இவ்வாறு அரமத்தமை தொடர்பில் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடற்கரையோரத்தில் காற்றின் வேகம் அதிகரிக்கும் போது கூரையின் தகடுகள் அருகிலுள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு வீசப்படலாம் என்ற அச்சமும் மக்களிடையே தோன்றியுள்ளது.

சரியான திட்டமிடல் இன்மையால் மக்களின் பணம் இவ்வாறே வீணாகின்றது என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தமிழக பா.ஜ.கவினர் மீது தாக்குதல்: ஆய்வு செய்ய 4 பேர் குழு நியமனம்



தமிழக அரசால், பா.ஜ.கவினர் எதிர்கொண்டு வரும் தாக்குதல் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை அளிக்க 4 பேர் கொண்ட குழுவை அமைத்து பா.ஜ.க. தேசிய தலைவர் ஜெ.பி. நட்டா உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் குழு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆய்வு செய்து அறிக்கையை பா.ஜ.க. மேலிடத்திடம் விரைவில் வழங்கும். இந்த 4 பேர் கொண்ட குழுவில், கர்நாடக முன்னாள் முதல்வரும், முன்னாள் மத்திய அமைச்சரும், மக்களவை உறுப்பினருமான டி.வி.சதானந்த கவுடா, மும்பை முன்னாள் பொலிஸ் அதிகாரி, மக்களவை உறுப்பினருமான சத்யபால் சிங், ஆந்திர மாநில பா.ஜ.க. தலைவர் டி.புரந்தேஸ்வரி, மக்களவை உறுப்பினர் பி.சி. மோகன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

பா.ஜ.க. தேசிய பொதுச் செயலர் அருண் சிங் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஜெ.பி.நட்டாவின் இந்த அறிவிப்புக்கு பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், கடந்த 2 ஆண்டுகளாக பா.ஜ.கவின் சமூக ஊடக நிர்வாகிகள் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு, கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

நள்ளிரவு மற்றும் அதிகாலையில் கைது செய்வது, வார இறுதி நாட்கள் அல்லது தொடர் விடுமுறை நாட்களில் கைது செய்வது போன்ற செயல்களில் தி.மு.க. அரசு ஈடுபடுகிறது.

சமூக மற்றும் முக்கிய ஊடகங்களில் பிரபலமானவர்களை குறிவைத்து கைது செய்வதில் தி.மு.க. அரசு தீவிரம் காட்டுகிறது. இதுபோன்ற அத்துமீறல்களையும், அதிகார துஷ்பிரயோகத்தையும் இந்த குழு வெளிச்சத்துக்கு கொண்டு வரும் என நம்புகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# கவுதமி விலகல் மனவேதனை தருகிறது: பா.ஜ.கவின் எம்.எல்.ஏ. வானதி தகவல்

கவுதமி விலகல் மனவேதனை தருகிறது என பா.ஜ.கவின் எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

கவுதமி கொடுத்த புகாரின் மீது இத்தனை நாட்களாக நடவடிக்கை எடுக்காமல் இருந்த அரசு. அவர் கட்சியிலிருந்து விலகிய பின்னர் அவரது புகாரை பதிவு செய்துள்ளது. கட்சியில் இருந்து வெளியே வந்தால்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நெருக்கடி கொடுத்தார்களா? என்று தெரியவில்லை என்று வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.

கோவை கோட்டை சங்கமேஸ்வரர் கோயிலில் பா.ஜ.க. சார்பில் நேற்று சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இதன்போது அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், எனக்கு கவுதமி மீது அதீதமான அன்பு, பாசம், மரியாதை உண்டு. பா,ஜ,கவில் கடந்த ஒருசில



ஆண்டுகளாக தீவிரமாக உழைக்கக்கூடிய பெண்மணி அவர்.

அவர் எந்தளவுக்கு கட்சிக்காக கடுமையாக உழைத்தார் என்பது எனக்கும் தெரியும். அவர் கட்சியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ள கடிதத் தைப் பார்க்கும்போது எனக்கு கடுமை யான மனவேதனை ஏற்படுகிறது.

பா,ஜ,க, மகளிரணியில் இணைந்து பணியாற்றுவதற்காகக் கூட கவுதமியிடம் நான் ஒரு மூன்று வருடங்களுக்கு முன்பு கேட்டிருந்தேன். தேசிய அளவில் என்னுடன் இணைந்து பணியாற்ற அழைத்தபோது, இல்லை மாநிலத்தில் நான் பணியாற்றுவதாக கவுதமி கூறிவிட்டார்.


தற்போது, எனக்கு மாநில அளவிலான பணிகளில் எனது வேலை குறைந்துவிட்டதாலும், அதிகமாக கவுதமியை பார்ப்பதற்கோ, பழகுவதற்வோ, பேசுவதற்கோ நேரம் இல்லாமல் இருந்தது. ஆனாலும், கடந்த மாதம்கூட அவருடன் பேசினேன். என்னுடைய தேர்தல் பரப்புரை உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவர் என்று தெரிவித்துள்ளார்.

# தீவிரவாதத்துக்கு எதிராக உலகம் ஒன்றுபட வேண்டும்: ராஜ்நாத் சிங்

தீவிரவாதத்துக்கு எதிராக உலகம் ஒன்றுபட வேண்டும் என்று இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் குறித்து தெரிவித்த ராஜ்நாத் சிங், தீவிரவாதத்துக்கு எதிராக உலகம் ஓரணியில் ஒன்றுபட வேண்டும். இதன் மூலம் அப்பாவி மக்கள் பாதிக்கப் படமாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார்.

இந்தப் போரில் இந்தியா, இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# அல் அஹ்லி வைத்தியசாலை மீதான தாக்குதல் காசா பகுதியில் இருந்தே மேற்கொள்ளப்பட்டது!

## பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் உறுதி



காசா வைத்தியசாலை மீது முன்னெடுக்கப்பட்ட தாக்குதல் சம்பவமானது உண்மையில் காசா பகுதியில் இருந்தே முன்னெடுக்கப்பட்டதாக பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் உறுதிப்பட தெரிவித்துள்ளார்.

காசா பகுதியில் உள்ள அல் அஹ்லி வைத்திய சாலையை இஸ்ரேல் தரப்பு தாக்கியது என ஹமாஸ் குற்றஞ்சாட்டியது.

ஆனால் தங்களுக்கு இதில் பங்கில்லை என இஸ்ரேல் கடுமையாக இதனை மறுத்தது.

அதுமட்டுமின்றி, ஹமாஸ் ஆதரவு இயக்கம் ஒன்றே தாக்குதலை மேற்கொண்டுள்ளது என இஸ்ரேல் குறிப்பிட்டது.

இந்த தாக்குதலின் தொடக்கத்தில் மொத்தம் 500 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர் என ஹமாஸ் குற்றஞ்சாட்டி வந்தது.

இந்த நிலையில், உண்மையான எண்ணிக்கை மிக குறைவு என்றே உளவுத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன என ரிஷி சுனக் கூறியுள்ளார்.

இந்த நிலையிலேயே பிரித்தானிய நாடாளுமன்றத்தில் பிரதமர் ரிஷி சுனக் தாக்குதல் விவகாரம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த பாதிப்பானது காசா பகுதியில் இருந்து இஸ்ரேலை நோக்கி ஏவப்பட்ட ஏவுகணையால் உருவானது என்றே சுனக் குறிப்பிட்டுள்ளார்.

ஹமாஸ் படைகளுக்கு, இனி காசா அல்லது பாலஸ்தீனத்தின் எந்தவொரு பகுதியிலும் அதிகாரம் செலுத்த முடியாது என்றார். மேலும், காசா பகுதி அப்பாவி மக்களுக்காக கூடுதலாக 20 மில்லியன் பவுண்டுகள் நிதியுதவி அளிக்கப்படும் எனவும், காசாவில் சிக்கியுள்ள



பிரித்தானியர்களை மீட்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் எனவும் சுட்டக்காட்டினார்

மேலும், மத்திய கிழக்கில் நடந்து வரும் போரை உக்ரைனில் புடினின் கொடூரங்களுடன் ஒப்பிட்ட ரிஷி சுனக், உக்ரைனில் புடின் தோல்வியடைவது உறுதி என குறிப்பிட்டுள்ளதுடன், ஹமாஸ் படைகளுக்கும் அதே நிலை தான் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# இரண்டு பணயக் கைதிகளை விடுவித்தது ஹமாஸ்!

ஹமாஸ் அமைப்பினர் மேலும் இரண்டு பணயக் கைதிகளை விடுவித்துள்ளனர். இது குறித்த அறிவிப்பை இஸ்ரேல் தரப்பு இன்னும் உறுதி செய்யவில்லை.

கடந்த 7 ஆம் திகதி ஏராளமான இஸ்ரேலியர்கள் மற்றும் வெளிநாட்டினரை ஹமாஸ் அமைப்பினர் சிறைபிடித்து சென்றனர். இஸ்ரேல் மீது நடத்திய திடீர் தாக்குதலை தொடர்ந்து அவர்கள் காசா பகுதியில் ஹமாஸ் அமைப்பினரால் சிறை வைக்கப்பட்டுள்ளனர். பணயக் கைதிகளில் சிலர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோரை இஸ்ரேல் மீட்டது. இந்த நிலையில் மேலும் இரண்டு



பணயக் கைதிகளை ஹமாஸ் விடுவித்து உள்ளது . இதனை செஞ்சிலுவை சங்கம் உறுதி செய்துள்ளது. கடந்த சனிக்கிழமை அன்று இரண்டு அமெரிக்க பணயக் கைதிகளை ஹமாஸ் விடுவித்து இருந்தது.

மனிதாபிமான அடிப்படையில் வயது முதிர்ந்த இரண்டு இஸ்ரேலியர்களை ஹமாஸ் தற்போது விடுவித்துள்ளது. உடல்நிலை சார்ந்த காரணங்களுக்காக வயது முதிர்ந்த இருவரை விடுவித்துள்ளோம் என ஹமாஸ் தெரிவித்துள்ளது.

நூரிட் கூப்பர் (வயது 79), யோச்செவ் லிஃப்ஷிட்ஸ் (வயது 85) என இரண்டு பெண்களை ஹமாஸ் விடுவித்துள்ளது.

அவர்கள் வீட்டில் இருந்தபோது ஹமாஸ் சிறை பிடித்தது. அவர்களது கணவர்களும் பணயக் கைதிகளாக சிறை பிடிக்கப்பட்டனர். ஆனால், அவர்கள் இன்னும் ஹமாஸ் வசம் உள்ளனர். சுமார் 220 இற்கும் மேற்பட்ட பணயக் கைதிகள் ஹமாஸ் வசம் தற்போது உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.